# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2012 டிசம்பர் திங்கள் 31.12.2012–ம் நாள் திங்கள்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18090/02/யுபி1 நாள் 28.05.2012–ல் புராதன நகர மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.20.00 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேசம் அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட குளச்சல் திங்கள்நகர் புராதன சாலையில், திக்கணங்கோடு சாலை சந்திப்பு முதல் வி.கே.பி.பள்ளிவரை சாலையின் இருபக்க ஓரங்களில், சாலையின் விளிம்பிற்கும், வடிகால் ஓடையின் விளிம்பிற்கும் இடையிலுள்ள பகுதியில் (சாலையின் ஓரங்களில்) பேவர் பிளாக் பதிக்கும் பணியினை மேற்கொள்வதற்கு ரூ.25.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதற்கும், திட்ட நிதி ரூ.20.00 இலட்சம் போக மீதி ரூ.5.00 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/4585/2009)

**தீர்மானம் எண்.458. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், பிளாஸ்டிக் சாலை 2012–13 திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட உள்ள பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவிலான பத்திரிக்கைகளான டெக்கான் கிராணிக்கிள் மற்றும் தினபூமி ஆகியவற்றில் வெளியிட்ட வகையில் ரூ.35,195/–ஐ வழங்க கேட்டு ரவி பப்ளிசிட்டி சர்வீஸ், சென்னை நிறுவனத்திடமிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3594/2012)

**தீர்மானம் எண்.459. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரத்தை சட்டப் பேரவை வைர விழா சிறப்பு மலரில் வெளியிட்ட வகையில் கீழ்காணும் விவரப்படி சம்மந்தப்பட்ட அலுவலகங்களிலிருந்து பட்டியல்கள் பெறப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | தினத்தந்தி நாளிதழ்<br>நாகர்கோவில் | ரூ.5,600/– |
| 2 | மாலை முரசு நாளிதழ்<br>மதுரை | ரூ.6,400/– |

மேற்படி பட்டியல் தொகைகளை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2045/2012)

**தீர்மானம் எண்.460. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சியில், பிளாஸ்டிக் சாலை 2012–13 திட்டத்தின்கீழ் ரூ.24.06 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள பணிகளுக்கு 16.11.2012 அன்று சிப்பம் முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் Technical Bid திறக்கப்பட்டு, தொழில் நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்தத்தாரர்கள் முன்னிலையில் 27.11.2012 அன்று Price Bid திறக்கப்பட்டது. அதன் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.தேவகரின்சாம் ஒப்பந்தத்தாரர் | ரூ. 24,17,100/– (மதிப்பீட்டை விட 4.39% அதிகம்) |
| 2. | திரு.எ. விஷ்ணுராம், ஒப்பந்தத்தாரர் | ரூ. 23,14,497/– (மதிப்பீட்டை விட 0.04% குறைவு.) |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எ.விஷ்ணுராம், ஒப்பந்தத்தாரரின் மதிப்பீட்டை விட 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று Letter of Acceptance (LOA) வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று Letter of Acceptance வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.இ1/3594/2011)

**தீர்மானம் எண்.461. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி குழுமம் 2012–13–திட்டத்தின்கீழ் ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட குப்பை கொட்டும் தொட்டிகள் (HDPE Bins 20 Nos. and SS Compactor Bins 25 Nos) 45 எண்ணங்கள் வினியோகம் செய்வதற்கு 31.10.2012 அன்று சிப்பம் முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. அதன் அடிப்படையில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் Technical Bids திறக்கப்பட்டு, அதில் தொழில் நுட்ப தகுதிவாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளின் Price Bid சம்மந்தப்பட்ட ஒப்பந்தத்தாரர்கள் முன்னிலையில் 19.11.2012 அன்று திறக்கப்பட்டது. அதன் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | M/S. Southern Solid Waste Management Service, No.12/182C, Appattuvilai, Kootamavu, Mulagumoodu P.O. | 1) இனம் எண்.1–க்கு மதிப்பீட்டைவிட 38.75% குறைவு (ரூ.24,500/–)<br>2) இனம் எண்.2–க்கு மதிப்பீட்டைவிட 11.11% கூடுதல். (ரூ.44,444/–) |
| 2 | M/S. Jegan Agencies, 355, B.M.S.Kattayanvilai, Vettoornimadam P.O. | தொழில் நுட்ப தகுதி இல்லை. ஆவணங்கள் எதுவும் சான்றொப்பம் பெறப்படவில்லை. எனவே ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. |
| 3 | M/S. Venkadeeswara VIP Enterprises, No:66, Malavia Street, Ram Nager, Coimbatore-641009. | 1) இனம் எண்.1–க்கு மதிப்பீட்டைவிட 1.75% குறைவு (ரூ.39,300/–)<br>2) இனம் எண்.2–க்கு மதிப்பீட்டைவிட 1.75% குறைவு (ரூ.39,300/– ) |
| 4 | M/S. Sharp Systems, H,No,106-A, Beem sail Colony, Sai Nagar, Podanur, Coimbatore Post. | 1) இனம் எண்.1–க்கு மதிப்பீட்டைவிட 16.75% குறைவு (ரூ.33,300/–)<br>2) இனம் எண்.2–க்கு மதிப்பீட்டைவிட 18.44% குறைவு (ரூ. 47,375/– ) |

| | | |
|---|---|---|
| 5 | M/S. Sri,Vinayaga Industry,<br>148-10/B, Saraswathi Nager,<br>Venthoni Post,<br>Paramakudy. | 1) இனம் எண்.1–க்கு<br>மதிப்பீட்டைவிட 5% குறைவு<br>(ரூ.38,000/–)<br>2) இனம் எண்.2–க்கு<br>மதிப்பீட்டைவிட 22.50% குறைவு<br>(ரூ. 31,000/– ) |
| 6 | M/S. Sri,Vinayaga Trading Company<br>No.3-557.G2,<br>Bhagavath Sing Road,<br>Paramakudy. | 1) இனம் எண்.1–க்கு<br>மதிப்பீட்டைவிட 7.50% குறைவு<br>(ரூ.37,000/–)<br>2) இனம் எண்.2–க்கு<br>மதிப்பீட்டைவிட 25% குறைவு<br>(ரூ. 30,000/– ) |
| 7 | M/S. Rani Metal Works,<br>No.56/A, Vivekanandha Street,<br>Thirunagar,<br>Vellore – 632 006. | 1) இனம் எண்.1–க்கு<br>மதிப்பீட்டைவிட 28.50% குறைவு<br>(ரூ.28,600/–)<br>2) இனம் எண்.2–க்கு<br>மதிப்பீட்டைவிட 5% அதிகம்.<br>(ரூ. 42,000/– ) |
| 8 | M/S. Sakthi Body Works,<br>No.46, Poonthamalle Bye-pass Road,<br>Poonthamalle,<br>Chennai – 56. | 1) இனம் எண்.1–க்கு<br>மதிப்பீட்டைவிட 30% குறைவு<br>(ரூ.28,000/–)<br>2) இனம் எண்.2–க்கு<br>விலை எதுவும் எழுதவில்லை. |
| 9 | R.Madusudhanan,<br>723, P.H.Road,<br>Aminjikarai,<br>Chennai -29. | தொழில் நுட்ப தகுதி இல்லை. ஆவணங்கள் எதுவும் சான்றொப்பம் பெறப்படவில்லை. எனவே ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. |

மேற்படி 9 ஒப்பந்தப்புள்ளிகளில் 7 ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே தொழில்நுட்ப தகுதி வாய்ந்தவை. அவற்றில் இனம் எண்.1–க்கு மதிப்பீட்டைவிட 38.75% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. Southern Solid Waste Management Service, Kootamavu.நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், இனம் 2–க்கு மதிப்பீட்டைவிட 25% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Sri.Vinayaga Trading Company, Paramakudy நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2750/2012)

**தீர்மானம் எண்.462. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**
HDPE Bins 20 Nos. and SS Compactor Bins 25 Nos மொத்தம் 45யும் SS Compactor Bins ஆகவே எடுத்துக்கொள்ளவும், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்திற்கு கொடுத்திடவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 6**

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி குழுமம் 2012–13–திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட உள்ள சிப்பம் எண். V, VI மற்றும் VII –க்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவிலான பத்திரிக்கைகளான இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் மக்கள் குரல் ஆகியவற்றில் வெளியிட்ட வகையில் ரூ.74,394/–ஐ வழங்க கேட்டு ரவி பப்ளிசிட்டி சர்வீஸ், சென்னை நிறுவனத்திடமிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2750/2012)

**தீர்மானம் எண்.463. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சி பகுதிகளில் உள்ள வார்டுகளில் மூன்றில் ஒரு பங்கு வீட்டினுள் புகை மருந்து அடிக்கும் இயந்திரங்கள் வாங்கி அதனை தேவைக்கேற்ப பயன்படுத்த நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் 04.12.2012 மற்றும் 15.12.2012 –ம் தேதிய ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது குறித்து ஏற்கெனவே நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்திலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலையிலும் கூடுதலாக வீட்டினுள் புகை மருந்து அடிக்கும் இயந்திரங்கள் தேவைப்படுவதால் மேற்படி அறிவுரைகளின் பேரில் 5 Indoor Fogging Machine மற்றும் அதற்கான 130 சிலிண்டர் உருளைகள் வாங்க உத்தேச செலவு ரூ.1,30,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/3702/2009)

**தீர்மானம் எண்.464. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

குளச்சல் நகராட்சி பகுதியில் டெங்கு முன்னெச்சரிக்கை பணிகள் ரூ. 5,00,000/– மதிப்பீட்டில் செய்யப்பட்டு வந்தது. மேற்படி மதிப்பீட்டு தொகை 13.12.2012 தேதியுடன் முடிவடைந்து விட்டதால் அதற்கான பணியாளர்கள் ஒப்பந்ததாரர் மூலம் நகராட்சி அறிவிப்புபடி நிறுத்தப்பட்டுள்ளதால், தற்போதைய நிலையில் டெங்கு நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகள் மேற்கொள்ள பணியாளர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

எனவே டெங்கு நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் மற்றும் பொது சுகாதார நலன் காக்கும் பொருட்டு 9 (ஒன்பது) பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நிர்ணயித்துள்ள ஊதியம் ரூ. 275/– (நாள் 1–க்கு 1 நபருக்கு) –ன்படி தினக்கூலிக்கு 1 ஆண்டுக்கு பணியமர்த்த உத்தேச செலவு ரூ.10,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1982/2012)

**தீர்மானம் எண்.465. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்குட்பட்ட வாய்க்கால் தெருவில் கதவு எண்.16/347–9 –ல் உள்ள குடிநீர் குழாய் இணைப்பு வரி நிலுவை அதிகம் இருந்த காரணத்தினால் துண்டிப்பு செய்யப்பட்டது. தற்போது மனுதாரர் வரி நிலுவை முழுவதையும் செலுத்திவிட்டு மீண்டும் இணைப்பு கோரியுள்ளார். எனவே மனுதாரரின் வேண்டுகோளின்படி மீண்டும் இணைப்பு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/4353/2012)

**தீர்மானம் எண்.466. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, கடை வாடகை, தொழில் உரிம கட்டணம் ஆகியவற்றின் நிலுவை வரியை செலுத்த கோரி பத்திரிகையில் விளம்பரம் செய்த வகையில் தினத்தந்தி பத்திரிகைக்கு ரூ.1,120/– ஐ வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.அ1/4826/2007)

**தீர்மானம் எண்.467. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2012 டிசம்பர் திங்கள் 31.12.2012–ம் நாள் திங்கள்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சி பொறியியல் பிரிவு கோப்புக்கள் மற்றும் அளவு புத்தகங்களை பராமரிப்பதற்கு தற்போதுள்ள பீரோ போதுமானதாக இல்லாத காரணத்தால் 6 ½ ‘ x 3’ அளவில் புதிதாக 2 பீரோக்களை (Steel Almirah ) The Kanyakumari District Small Scale Engineering Service Industrial Co-operative Society Ltd., Konam, Nagercoil நிறுவனத்திடமிருந்து பீரோ ஒன்றிற்கு ரூ.13,500/– விலை நிரக்கில் நேரடியாக வாங்குவதற்கும், அதற்கான செலவுத் தொகை ரூ.27,000./– ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1871/2010)

**தீர்மானம் எண்.468. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி குழுமம் 2012–2013 (IUDM) திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.**390** நாள் **28.09.2012 –**ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதனடிப்படையில் குடிநீர் விநியோகப் பணிகளுக்கு மதிப்பீடு தொகை ரூ.75.00 இலட்சத்திற்கு சிப்பம் எண்.5–ல் கீழ்க்கண்ட இரண்டு பணிகளுக்கு இரண்டு தொகுப்பாக பிரித்து 16.11.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பணியின் விபரம் பின்வருமாறு :

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 (a) | இந்நகராட்சி குடிநீர் வினியோக பணிகளுக்கு தேவையான 200 கிலோ வாட் மற்றும் 45 கிலோ வாட் மின்சக்தி கொண்ட ஜெனரேட்டர்கள் வினியோகம் மற்றும் அது தொடர்பான இதரப் பணிகள் மேற்கொள்ளுதல். | 50.00 |
| (b) | ஜெனரேட்டர்களுக்கான அறை கட்டுதல் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கான சுற்றுச்சுவர் கட்டுதல். | 25.00 |
| | **மொத்தம்** | **ரூ. 75.00 இலட்சம்** |

மேற்படி பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் Technical Bids திறக்கப்பட்டு அதன் பின்னர் தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் 27.11.2012 அன்று Price Bid திறக்கப்பட்டது.

**வ.எண்.1 (a) –ன் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :**

| | | |
|---|---|---|
| 1 | M/S.Asiaatech Engineering Associates, 111-A, Court Road, Nagercoil | மதிப்பீட்டைவிட 4.42% குறைவு (ரூ. 4707000/– ) |
| 2 | M/S.Kevin Components, Sasthri Nagar, Vadapalani, Chennai - 26. | மதிப்பீட்டைவிட 2.82% குறைவு (ரூ. 4785700/– ) |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட இருவரும் குறைத்து ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர். இருவரில் மீதிப்பீட்டைவிட ஏசியாடெக் இஞ்சினியரிங் அசோசியேட், நாகர்கோவில் நிறுவனம் 4.42% குறைத்து கொடுத்துள்ளார். மேலும் இரண்டு நிறுவனங்களுக்கும் தாங்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மத்திய அரசின் மரபுசாரா

எரிசக்தி துறையால் வழங்கப்படும் 30% மானியத்தொகை பெற்று தருவது தொடர்பான விளக்கங்கள் குறித்து மேற்படி இரண்டு நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி ஏசியாடெக் இஞ்சினியரிங் அசோசியேட், நாகர்கோவில் நிறுவனம் மானியத் தொகையை கழித்து தான் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட்டுள்ளது எனவும், கெவின் காம்போனன்ட்ஸ் நிறுவனம் 30% மானியத்தை பெற்றுத் தரும் பொறுப்பை ஏற்கும் எனவும் தெரிவித்துள்ளனர். எனவே மேற்படி விவரம் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**வ.எண்.1 (b) –ன் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :**

| | | |
|---|---|---|
| 1 | M/S.Asiaatech Engineering Associates,<br>111-A, Court Road, Nagercoil | மதிப்பீட்டைவிட 0.23% அதிகம்.<br>(ரூ. 2353730/– |
| 2 | M/S.Kevin Components,<br>Sasthri Nagar,<br>Vadapalani, Chennai - 26. | மதிப்பீட்டைவிட 1.35% குறைவு<br>(ரூ. 2316574/– ) |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 1.35% குறைத்து கொடுத்துள்ள M/S.Kevin Components, Vadapalani, Chennai – 26-ன் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று Letter of Acceptance (LOA) வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : (1) பணி எண். 1 (a) –க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள இரண்டு நிறுவனங்களில் மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தி துறையால் வழங்கப்படும் 30% மானியத் தொகையை பெற்றுத்தரும் நிறுவனமான M/S.Kevin Components, Vadapalani, Chennai – 26 ஒப்பந்தப்புள்ளியை ஏற்று Letter of Acceptance (LOA) வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(2) பணி எண். 1 (b) –க்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 1.35% குறைத்து கொடுத்துள்ள M/S.Kevin Components, Vadapalani, Chennai – 26-ன் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று Letter of Acceptance (LOA) வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ1/2750/2012)

**தீர்மானம் எண்.469 அலுவலக குறிப்பு ஏற்று பணி எண்1(a)க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள இரண்டு நிறுவனங்களில் M/S.Kevin Components, Sasthri Nagar, Vadapalani,Chennai– 26 ஒப்பந்தப்புள்ளியை ஏற்றும், மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தி துறையால் வழங்கப்படும் 30% மானிய தொகையை பெற்று தருவதாகவும், எழுத்துமூலம் தந்திருப்பதால் பணி எண்.(b)க்கு தரப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியையும் ஏற்று (LOA) வழங்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளையும் M/S.Kevin Components, Sasthri Nagar, Vadapalani, Chennai–26க்கே கொடுத்திட ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.17028/2012/ஜே1–2 நாள் 29.06.2012 –ன்படி கோவில்பட்டி நகராட்சியிலிருந்து குளச்சல் நகராட்சிக்கு துப்புரவு ஆய்வாளராக பணிமாற்றம் செய்ததை தொடர்ந்து திரு.ஆர்.ராஜாராம், துப்புரவு ஆய்வாளருக்கு மாறுதல் பயணப்பட்டியல் தொகை ரூ.12,813/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : ரூ.12,813/– வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.470. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10–க்குட்பட்ட மீனவர் ஓய்வறையின் தரைகள், மற்றும் சுவர்கள் மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே மேற்படி மீனவர் ஓய்வறையை பழுதுநீக்கம் செய்யவும், தரையில் டைல்ஸ் பதிப்பதற்கும் மதிப்பீட்டு தொகை ரூ.1,10,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/4286/2012)

**தீர்மானம் எண்.471. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சியில் 12–வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் மேற்கொள்ள 15 எண்ணம் ( Push Cart ) தள்ளுவண்டிகள் வாங்கப்பட்டுள்ளது. ஒரு வண்டிக்கு 2 எண்ணம் சிகப்பு மற்றும் 2 எண்ணம் பச்சை நிறங்களில் 50 லிட்டர் கொள்ளளவு கொண்ட பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகள் 60 எண்ணம் ( 15 x 4 = 60 ) மற்றும் கூடுதலாக 10 எண்ணம் சேர்த்து மொத்தம் 70 எண்ணம் மூடியுடன் கூடிய பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகள் வாங்க மதிப்பீடு தொகை ரூ.46,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/104/2006)

**தீர்மானம் எண்.472. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட பழைய மார்க்கெட் சாலையிலிருந்து நரிக்கல் செல்லும் சாலையில் 3" பிவிசி பகிர்மான குழாயில் உடைவு ஏற்பட்டுள்ளதால், குடிநீர் வடிகால் ஓடையில் சென்று வீணாகி கொண்டிருக்கிறது. எனவே அப்பகுதி மக்களுக்கு குடிநீர் சீராக வழங்க முடியவில்லை. வடிகால் ஓடையின் அருகில் பகிர்மான குழாய் உள்ளதால், குடிநீர் குழாயில் கழிவுநீர் கலப்பதற்கு வாய்ப்புள்ளது. எனவே குடிநீரின் அவசியம் கருதி 4" பிவிசி பகிர்மான குழாய் புதிதாக அமைக்கவும், அதனால் பழுதடையும் சாலையை சரி செய்யவும், மதிப்பீடு தொகை ரூ.1,20,000/– க்கு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/ /2012)

**தீர்மானம் எண்.473. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19–ல் நெசவாளர் தெருவில் அஞ்சாலிவிளை அங்கன்வாடி மையம் அருகிலுள்ள குறுக்கு தெருக்களில் சாலை மிகவும் சேதமடைந்துள்ளதால் பேவர் பிளாக் அமைத்து சாலையை சரி செய்வதற்கு மதிப்பீடு தொகை ரூ. 1,60,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3648/2012)

**தீர்மானம் எண்.474. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி